RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 12 | ஜனவரி.18 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு: 19 காளைகளை அடக்கி கருப்பாயூரணி கார்த்திக் முதலிடம்; அபிசித்தர் 2 வது இடம்!

மதுரை: ஜன.18-

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் 19 காளைகளை அடக்கி சிறந்த மாடுபிடி வீரராக கருப்பாயூரணி கார்த்திக் வெற்றி பெற்றார். 17 காளைகளை அடக்கிய சிவகங்கை மாவட்டம் பூவந்தி அபிசித்தர் 2 வது இடத்தை பிடித்தார்.

மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த மாடுபிடி வீரராக கருப்பாயூரணியைச் சேர்ந்த கார்த்திக் 19 காளைகளை அடக்கி முதலிடம் பிடித்தார். இவருக்கு முதல்வர் வழங்கிய கார், ரூ. 3 லட்சம் ரொக்க பரிசு மற்றும் கூடுதலாக பசுமாடு கன்று வழங்கப்பட்டது. 17 காளைகளை அடக்கிய சிவகங்கை மாவட்டம், பூவந்தி அபிசித்தர் 2 வது இடத்தை பிடித்தார். இவருக்கு பைக் மற்றும் ரூ. 2 லட்சம் ரொக்க பரிசையும் முதல்வர் வழங்கினர். 11 காளைகளை அடக்கி 3 வது இடம் பிடித்த பாசிங்காபுரம் ஸ்ரீதருக்கு மின்சார பைக், ரூ. 1 லட்சம் பரிசு வழங்கப்பட்டது.

சிறந்த காளைகளுக்கான முதலிடத்தை புதுக்கோட்டை கோவில்பட்டியைச் சேர்ந்த ஏவிஎம். பாபு என்பவரின் காளை பிடித்துள்ளது. இவருக்கு பரிசாக டிராக்டர் மற்றும் பசுமாடு கன்று வழங்கப்பட்டது. புதுக்கோட்டை கைக்குறிச்சி தமிழரசன் என்பவரின் காளை 2வது இடமும், 3வது இடத்தை மேட்டுபட்டி கென்னடியின் காளையும் பிடித்துள்ளன. இவர்களுக்கு பைக்குகள் பரிசாக வழங்கப்பட்டன. பரிசுகளை அமைச்சர் பி. மூர்த்தி வழங்கினார். ஆட்சியர் பிரவீன்குமார், எஸ்.பி அரவிந்த் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



அரசு வேலை என்ற முதல்வரின் அறிவிப்பை என் மூலமாக நிறைவேற்றவேண்டும்: அரசு வேலை என்ற முதல்வரின் அறிவிப்பை என் மூலம் நிறைவேற்ற வேண்டும் என அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் சிறந்த வீரருக்கான முதல் பரிசு பெற்ற கார்த்திக் கூறினார்.

இந்த ஜல்லிக்கட்டில் முதலிடம் பெற்ற கார்த்திக் கூறுகையில், "ஜல்லிக்கட்டில் சிறந்த வீரருக்கு கால்நடைத் துறையில் முன்னுரிமை அடிப்படையில் அரசு வேலை அளிக்கப்படும் என தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்து இருப்பது மகிழ்ச்சி.

மாடுகளை பிடிக்க எனது நண்பர்கள், அண்ணன்கள் மூலம் நிறைய கற்றுக் கொடுத்தனர். அவர்களுக்கு என் வெற்றியை சமர்பிக்கிறேன். மாடுபிடி போட்டியில் சில இடையூறு இருந்தாலும், இதையெல்லாம் தாண்டி வெற்றி பெறவேண்டும் என்ற முனைப்பில் செயல் பட்டேன்.

ஏற்கெனவே பரிசுகள் பெற்ற இடங்களில் அரசு வேலை வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்தோம். தற்போது, திமுக அரசு நிறைவேற்றி இருக்கிறது. எனக்கு தந்தை இல்லை. முதல்வரின் அறிவிப்பை நிறைவேற்றும் விதமாக எனக்கு அரசு வேலை வழங்கவேண்டும் ,' என்றார்.

சிறந்த காளைக்கான முதல் பரிசு பெற்ற புதுக்கோட்டை ஏவிஎம். பாபு கூறுகையில், "கடந்த 40 ஆண்டாக ஜல்லிக்கட்டு காளை வளர்க்கிறேன். சிறந்த வீரர்களுக்கு அரசு வேலை என்ற அறிவிப்பு போன்று, ஜல்லிக்கட்டு காளைகளை பாதுகாக்க காளைகள் நல வாரியம் ஏற்படுத்தவேண்டும். நான் ஏற்கெனவே பிள்ளை போன்று வளர்த்த மாணிக்கம் என்ற 20 வயது காளை சமீபத்தில் உயிரிழந்தது. இதன் நினைவாக நரசிம்மா என்ற பெயரில் வளர்த்த காளை அலங்காநல்லூரில் சிறந்த காளைக்கான பரிசை பெற்று தந்துள்ளது பெருமை" என்றார்.

## "அரசு ஊழியர்களுக்கு திமுக கொடுத்த பால்கோவா" ஸ்ரீவில்லிபுத்தூரில் சொன்ன செல்லூர் ராஜு

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன.18-

அரசு ஊழியர்களுக்கு ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு பால்கோவா கொடுத்து உள்ளது என ஸ்ரீவில்லிபுத்தூரில் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ நேற்று குடும்பத்துடன் சுவாமி தரிசனம் செய்தார். பின்னர் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி கடந்த ஓரண்டாக அதிமுகவினருக்கு தேர்தல் பயிற்சி பட்டறைகளை நடத்தி வருகிறார். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா காலத்தில் கூட இதுபோன்ற பயிற்சி பட்டறைகளை நடத்தியது இல்லை. பழனிசாமி தலைமையில் ஆட்சி அமைவது உறுதி.



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள்கோயிலில் குடும்பத்துடன் சுவாமி தரிசனம் செய்து,பழனிசாமி மீண்டும் முதல்வராக வேண்டி பூஜை செய்து உள்ளேன். மக்களின் ஏகோபித்த எதிர்ப்புடன் திமுக ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. போதை கலாச்சாரம் ஒழிந்து மாணவர்கள் கல்வியில் சிறக்க வேண்டும், விலைவாசி குறைய வேண்டும், சட்ட ஒழுங்கு காக்கப்பட வேண்டும், திமுக ஆட்சி விலக வேண்டும் என்பதே மக்களின் கனவாக உள்ளது.

அரசு ஊழியர்களுக்கு ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு பால்கோவா கொடுத்து உள்ளது. திமுககொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. கடந்த 4 ஆண்டுகளாக பொங்கலுக்கு பணமே கொடுக்காத திமுக அரசு தற்போது வாக்குகளை பெறுவதற்காக ரூ.3 ஆயிரம் கொடுத்து உள்ளனர்.

பிரதமரை வரவேற்று வைக்கப்பட்டு உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி பேனரில் டிடிவி தினகரன் படம்வைக்கப்பட்டது குறித்து பொதுச்செயலாளர் தான் பதில் சொல்ல வேண்டும். தை பிறந்தால் வழி பிறக்கும் என ஓ.பி.எஸ் கூறியது அவரது கருத்து. திமுகவை எதிர்க்கும் யாராக இருந்தாலும், பழனிசாமி தலைமையை ஏற்றுக் கொண்டால் நாங்கள் சேர்த்துக் கொள்வோம் என்றார்.

## மகளிருக்கு மாதம் ரூ.2000, ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து திட்டம்" இபிஎஸ் 5 வாக்குறுதிகள்

### அதிமுக முதற்கட்ட தேர்தல் அறிக்கை!

சென்னை, ஜன.18-

"மகளிருக்கு மாதம் ரூ.2000 வழங்கப்படும், ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து திட்டம் செயல்படுத்தப்படும்" என முதற்கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109வது பிறந்தநாள் விழாவையொட்டி சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அக்கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடி.கே. பழனிசாமி, முதற்கட்ட தேர்தல் வாக்குறுதியாக 5 அறிவிப்புகளை அறிவித்துள்ளார்.



1. மகளிர் நலன் : (குலவிளக்குத் திட்டம்) சமூகத்தில் பொருளாதார சமநிலையை உருவாக்கிட, குலவிளக்கு திட்டத்தின் மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், ஒவ்வொரு மாதமும் உதவித் தொகையாக ரூபாய் 2,000/ வழங்கப்படும். இத்தொகை குடும்பத் தலைவியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

2. ஆண்களுக்கும், மகளிருக்கும் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம்: நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் ஆண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் செயல்படுத்தப்படும். ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும், நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3. அனைவருக்கும் வீடு (அம்மா இல்லம் திட்டம்): அம்மா இல்லம் திட்டம்' மூலம், கிராமப்புறங்களில் குடியிருப்பதற்கு சொந்த வீடு இல்லாதவர்களுக்கு, அரசே இடம் வாங்கி கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்.

அதேபோல், நகரப் பகுதிகளில் சொந்த வீடு இல்லாதவர்களுக்கு, அரசே இடம் வாங்கி அடுக்குமாடி வீடுகள் கட்டி 'அம்மா இல்லம் திட்டம்' மூலம் விலையில்லாமல் வழங்கப்படும். அதைப் போலவே, ஒரே குடும்பத்தில் வசிக்கும் பட்டியலின மக்கள், அவர்களுடைய மகன்கள் திருமணமாகி தனிக்குடித்தனம் செல்கின்றபோது, அரசே இடம் வாங்கி. அவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்.

4. 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும்: 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டம் 125 நாட்களாக உயர்த்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கான இத்திட்டம், 150 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டமாக உயர்த்தப்படும்.

5. அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்: மகளிருக்கு ரூ. 25,000 மானியத்துடன், 5 லட்சம் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கப்படும். ஆகிய 5 வாக்குறுதிகளை எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.


## "மக்களாட்சி செய்த புரட்சித் தலைவர்" எம்ஜிஆருக்கு விஜய் புகழ் வணக்கம்!

சென்னை, ஜன.18-

"எம்.ஜி.ஆர் பிறந்த நாளில், அவருக்கு என் புகழ் வணக்கத்தைச் செலுத்துகிறேன்" என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், அதிமுக நிறுவனத் தலைவருமான எம்ஜிஆரின் 109வது பிறந்த நாள் விழா இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அரசியல் கட்சி தலைவர்கள் அனைவரும் அவருக்கு புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தவெக தலைவர் விஜய் தனது



எக்ஸ் தளத்தில், "தமிழக மக்களின் நெஞ்சங்களில் பொன்மனச் செம்மலாக, ஏழை, எளியோருக்கான நலத்திட்டங்களின் நாயகராக, பேரறிஞர் அண்ணாவின் ஜனநாயகப் பாதையில், சாமானியர்களுக்கும் அதிகாரமளித்து, மக்களாட்சி செய்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பிறந்த நாளில், அவருக்கு என் புகழ் வணக்கத்தைச் செலுத்துகிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## வேலூர் சிஎம்சி மருத்துவர் வீட்டில் போதைப்பொருள் பறிமுதல்: அமலாக்கத் துறை அதிகாரிகளை சுற்றவிட்ட போலீஸ்!

வேலூர்,, ஜன.18-

வேலூர் சிஎம்சி டாக்டர் வீட்டில் அமலாக்கத் துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் மெத்தப்பட்டமைன், கஞ்சா போதை பொருளை பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக புகார் அளிக்க காவல் நிலையம், போதைபொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு என அமலாக்கத் துறையினர் மாறி மாறி அலைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வேலூர் தோட்டப்பாளையம் பிள்ளையார் கோயில் தெருவில் சிஎம்சி மருத்துவர்களுக்கான அடுக்குமாடி குடியிருப்பு அமைந்துள்ளது. இங்கு, மருத்துவர் பிளிங்கின் என்பவர் தங்கியுள்ளார். இவர், கடந்த மூன்று ஆண்டுகளாக சிஎம்சி அவசர சிகிச்சைப் பிரிவில் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். மருத்துவர் பிளிங்கின் கேரள மாதிலத்தைச் சேர்ந்தவர் என்றும் தற்போது விடுமுறையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதற்கிடையில், இவரது குடியிருப்பில் அமலாக்கத் துறை அதிகாரிகள் குழுவினர் துப்பாக்கி ஏந்திய சி.ஆர்.பி.எப் வீரர்கள் பாதுகாப்புடன் நேற்று சோதனை நடத்த முயன்றனர். அவர் வீட்டில் இல்லாத நிலையில் அவர் வருவதற்காக நீண்ட நேரம் காத்திருந்தனர். ஆனால், அவர் குடியிருப்புக்கு திரும்பாமல் திடீரென தலைமறைவானார்.

இதையடுத்து, அருகில் வசிக்கும் மருத்துவர்கள் உதவியுடன் பிளிங்கின் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்ற அதிகாரிகள் சோதனை நடத்தினர். நள்ளிரவு வரை நடந்த சோதனையில் 10 கிராம் மெத்தப்பட்டமைன், 100 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருளை தோட்டப்பாளையம் பகுதிக்கு உட்பட்ட வேலூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்க அமலாக்கப்பிரிவு போலீஸார் சென்றனர். அங்கு புகாரைப் பெற மறுத்த போலீஸார், தங்களுக்கு தொடர்பில்லாத சோதனையில் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள் குறித்து வழக்குப்பதிவு செய்ய முடியாது என்றும் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு போலீஸ் பிரிவில் (என்.ஐ.பி) ஒப்படைக்கும்படியும் கூறி அனுப்பி வைத்தனர். பின்னர், காட்பாடியில் உள்ள என்.ஐ.பி அலுவலகத்துக்கு அமலாக்கத் துறை அதிகாரிகள் சென்றனர். அந்த அலுவலகம் பூட்டியிருந்த நிலையில் தகவலின்பேரில் சிறிது நேரத்தில் என்.ஐ.பி போலீஸார் வந்தடைந்தனர். அமலாக்கத் துறை அதிகாரிகள் என்.ஐ.பி போலீஸாரிடம் நடந்த விவரங்களை கூறினர். அவர்களும் தங்கள் பிரிவில் குறைந்த எடைகொண்ட போதைப் பொருட்கள் மீது வழக்குப்பதிவு செய்ய முடியாது என்றும் ஒரு கிலோவுக்கு மேல் இருந்தால் வழக்குப்பதிவு செய்வோம் எனக் கூறியதுடன் வேலூர் வடக்கு காவல் நிலையம் செல்லும்படி அனுப்பி வைத்தனர். வேறு வழியில்லாமல் அமலாக்கத் துறை அதிகாரிகள் மீண்டும் வேலூர் வடக்கு காவல்நிலையம் சென்றனர். அமலாக்கத் துறை அதிகாரிகளைப் பார்த்ததும் திகைப்படைந்த வடக்கு காவல் நிலைய போலீஸார், அவர்களை காவல் நிலையத்திலேயே அமர வைத்து மீண்டும் என்.ஐ.பி போலீஸாரை காவல் நிலையத்துக்கு வரவழைக்க ஏற்பாடு செய்தனர். அமலாக்கத் துறை அதிகாரிகளை வேலூர் காட்பாடி என மாறி மாறி போலீஸார் சுற்றவிட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், யார் வழக்குப்பதிவு செய்வது என்பதில் இன்று பிற்பகல் வரை முடிவு எட்டப்படவில்லை. மேலும், போதைப் பொருளை கையோடு எடுத்துவராமல் அந்த வீட்டில் வைத்து அதை செல்போனில் எடுத்த புகைப்படத்தை மட்டும் காட்டியதால் போலீஸார் செய்வது தெரியாமல் திகைப்பில் உள்ளனர்.



# மதுரை அண்ணா நகர் பகுதிக்கழகம் சீமான் நகரில் சமத்துவப் பொங்கல் விழா

மதுரை ஜன 18.- மதுரை மாநகர் தமிழர் திருநாள் மற்றும் பொங்கல் விழாவினை முன்னிட்டு

திமுக அண்ணா நகர் பகுதியில் கருப்பாயூரணி சீமான் நகரில் சமத்துவப் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது...அண்ணா நகர் பகுதி திமுக சிறுபான்மையினர் பிரிவு துணை அமைப்பாளர் முகமது யாஸின் ஏற்பாட்டில், பகுதிக்கழக செயலாளர் சித்திக் , மாமன்ற உறுப்பினர்களான 35 வது வார்டு எம். பி. சுரேஷ், 9 வது எஸ். தனராஜ், சிறுபான்மையினர் பிரிவு அமைப்பாளர் அன்வர்கான் ஆகியோரது முன்னிலையிலும் பொங்கல் விழா நடைபெற்றது...இந்த நிகழ்ச்சியில் சர்க்கரைப் பொங்கல் உள்ளிட்ட பரிசுப்பொருட்கள் கழக நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டது...

இந்த நிகழ்ச்சியில் கருப்பாயூரணி முகைதீன் ஆண்டவர் ஜூம் ஆ பள்ளிவாசல் ஜமாஅத் தலைவர் அகமது சேட் , நிர்வாகிகளான எல். ரமேஷ்குமார் , முத்துக்கிருஷ்ணன் , தனிக்கொடி , நிஜாம் பாய் , அல்லா பிச்சை , ரிஸ்வான் , செல்லப்பாண்டி உள்ளிட்ட பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் விழாவை சிறப்பித்தனர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பகுதிக் கழக திமுக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் முகமது யாஸின் சிறப்பாக செய்திருந்தார்...

# இளையான்குடியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் 109வது பிறந்தநாள் விழா எழுச்சியுடன் கொண்டாட்டம்!



இளையான்குடி ஜன 18.-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூர் கழகம் சார்பில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனத் தலைவர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் 109வது பிறந்தநாள் விழா நேற்று சனிக்கிழமை காலை இளையான்குடி பஜார் பகுதியில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மரியாதை மற்றும் இனிப்பு வழங்கல்கழகப் பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்கவும், சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் PR. செந்தில்நாதன் ஆலோசனையின் படியும் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. பேரூர் கழகச் செயலாளர் M.A. நாகூர் மீரா தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது. சட்டமன்றத் தேர்தல் உறுதிமொழி நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக, நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடியார் தலைமையில் மீண்டும் கழக ஆட்சி அமைந்திட, நிர்வாகிகள் அனைவரும் அயராது பாடுபட வேண்டும் என உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் S. நாகராஜன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் S. செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்நிகழ்ச்சியில்: பேரூர் அவைத்தலைவர் V.S.H. அபுபக்கர் அம்மா பேரவை செயலாளர் பி. செய்யது இபுறாகிம்

எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் S. தாவூது பாட்சா துணைச் செயலாளர் S. அபுல் கலாம் ஆசாத் கழகப் பொருளாளர் J. அப்பாஸ் அலி

துணை செயலாளர் எம். திருநாவுக்கரசு சிறுபான்மை பிரிவு செயலாளர் A. மீரான் கனி மானாமதுரை நகர அவைத்தலைவர் M. ராமமூர்த்தி எம்.ஜி.ஆர் மன்றத் துணைச் செயலாளர் R.V. சண்முகநாதன் மாவட்ட இளைஞர் பாசறை இணை செயலாளர் R. பாக்கியராஜ் உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# மாடம்பாக்கம் 68வது வார்டு சார்பில் எம்ஜிஆர் 109வது பிறந்தநாளை முன்னிட்டு மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கினார்கள்

தாம்பரம் ஜனவரி 18- செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட மாடம்பாக்கம் பகுதி 68வது வட்ட கழக சார்பில் முன்னாள் அதிமுக நிறுவனரும் முன்னாள் முதலமைச்சருமான எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்த நாளை விழா மாடம்பாக்கம் பகுதி 68வது கிழக்கு வட்ட கழக செயலாளர் எஸ்.கனிபாஸ்கர் ஏற்பாட்டில் நடைபெற்றது

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக மாடம்பாக்கம் பகுதி கழகச் செயலாளரும் தாம்பரம் மாநகராட்சி 70வது வார்டு மாமன்ற உறுப்பினருமான மாடம்பாக்கம் எம்.தேவேந்திரன் கலந்து கொண்டு எம்ஜிஆர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர் பின்னர் பொதுமக்களுக்கு காலை காலை சிற்றுன்றி வழங்கினார்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு தலைவர் எம்.கே.கோவிந்தன், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ். மலர்மன்னன், 69வது மாமன்ற உறுப்பினர் வாட்டர் கே.ராஜ், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் எஸ்.ரமேஷ், பகுதி துணைச் செயலாளர் தேணுகா, நிர்வாகிகள் ராமலிங்கம், தீபம் சீனிவாசன், தேவராஜ், அருள், கே.எல். பாபு, வெங்கட்ராமன், செந்தாமரை, ஆனந்தன், சாந்தி, காமாட்சி, கணேஷ், செல்வராஜ், மஞ்சுளா, கணபதி, சுப்ரமணி, அப்சல் கான், பாபு, முனுசாமி, சேகர் டைலர், ரஞ்சன், குணசேகரன், ஆரோன், முரளி, அன்பு, சேட்டு, ஆகியோர் கலந்து எம்ஜிஆர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# செம்பாக்கத்தில் முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் 109வது பிறந்தநாளில் பொதுமக்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது

தாம்பரம் ஜனவரி 18- செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த செம்பாக்கத்தில் முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்த நாளை முன்னிட்டு செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக இலக்கிய அணி சார்பில், இணைச் செயலாளர் இ.எம்.டேனியல் ஏற்பாட்டில் மறைந்த எம்ஜிஆர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் எம்.பி சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கி சிறப்பித்தார் உடன் பகுதி கழகச் செயலாளர் இரா.மோகன், இணைச்செயலாளர் ராசாத்தி மற்றும் மாவட்ட, நகர, வட்ட கழக நிர்வாகி திரளாக கலந்து கொண்டனர்.



■ திருவள்ளுவர் தினத்தையொட்டி மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ச. தினேஷ்குமார். இ ஆ ப அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அது சமயம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. கோபு மற்றும் அலுவலக மேலாளர் திரு. குருநாதன் , கிருஷ்ணகிரி வட்டாட்சியர் திரு .ரமேஷ் உடனிருந்தனர்



■ திமுக கழக பொதுச்செயலாளரும், அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டிணம் மேற்கு ஒன்றியம் காவேரிப்பட்டிணம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக ஜே கே எஸ் பாபு அவர்களை நியமனம் செய்ததை அடுத்து, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அருகில் மாநில தொமுச துணை பொதுச்செயலாளர் மோகன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் பாபா மாதையன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# புரட்சித்தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம் ஜி ஆர் அவர்களின் 109 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

திருப்பூர், ஜன.18- **கழக காவல் தெய்வங்களின் நல்லாசியுடன்*

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சர் *மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின்* ஆணைக்கிணங்க,

தமிழ்நாடு எதிர்க்கட்சி கொறடா, முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர், கழக தலைமை நிலைய செயலாளர் *மாண்புமிகு அண்ணன் திரு S.P. வேலுமணி அவர்கள்* அறிவுறுத்தலின்படி

திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டச் கழக செயலாளர், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் *மாண்புமிகு அண்ணன் திரு சி.மகேந்திரன் M.A,MLA* அவர்களின் ஆலோசனைப்படி *மாவட்ட கழக பொருளாளர் திரு சின்னப்பன் (â) பழனிசாமி அவர்கள் முன்னிலையில்**தாராபுரம் நகர கழக செயலாளர் அண்ணன் திரு



CR (â) C.ராஜேந்திரன் B.E., அவர்களின் தலைமையில்* *17/1/2026* *சனிக்கிழமை காலை 10:00 மணி* அளவில் *அண்ணா சிலையின் முன் அமைக்கப்பட்டுள்ள புரட்சித்தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி, இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. அதை அடுத்து நகரச் செயலாளர் சி.ராஜேந்திரன் தலைமையில் 500 நபர்களுக்கு மேல் அன்னதானம் வழங்கப்பட்டதுஇந்நிகழ்வில் அனைத்து ,

*மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், வார்டு கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், சார்பு அணி மாவட்ட,நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், தலைமை கழக பேச்சாளர்கள்,கழக செயல் வீரர்கள் , வீராங்கனைகள் மற்றும் கழகத் தொண்டர்கள்* அனைவருக்கும் கலந்து கொண்டனர்.

என்றும் கழகப் பணியில் ,*தாராபுரம் நகரம் கழகம்*மற்றும் *தாராபுரம் நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு**திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டம்*

# 62 ஆண்டு காலமாக மூன்று தலைமுறையாக சமாதியில் பொங்கல் வைத்து வழிபாடு குடும்பம் பொதுமக்கள் மத்தியில் வரவேற்பு



நிலக்கோட்டை, ஜன.18-

தமிழகத்தில் பாரம்பரியமாக தைத்திருநாள் தை மாதத்தின் முதல் நாள் தமிழர் திருநாளான தைப்பொங்கல் மிகப்பெரிய அளவில் கொண்டாடி வருகின்றனர. தை மாதம் முதல் நாளான தைத்திருநாள் அன்று மக்கள் அனைவரும் வீட்டில் மனப் பொங்கல் வைத்து மகிழ்ச்சியாக கொண்டாடி வருகின்றனர். அதேபோன்று விவசாய மக்கள் மாட்டுப் பொங்கல் என்றும் இளம் ஜோடிகள் காணும் பொங்கல் என்றும் இப்படி ஒவ்வொரு நாளும் பொங்கல் வைத்து நமது கலாச்சாரத்தை பாரம்பரியமாக உலகளவில் பேசப்படும் விழா அன்றைய தினம் மாடுகளுக்கு ஜல்லிக்கட்டு நடத்தி மாடுகளுக்கும் மாடுபிடி வீரர்களுக்கும் பரிசுகளை வழங்கி அலங்காநல்லூர், பாலமேடு உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு தமிழனின் கலாச்சாரம் நிலை நிறுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் திண்டுக்கல் மாவட்டத்தில் சற்று வித்தியாசமாக 3 தலைமுறையாகவும், 62 ஆண்டுகளாக தொடர்ந்து ஒரு குடும்பமே சேர்ந்து வீட்டில் பொங்கல் வைப்பது தவிர்த்து தனது கணவருக்கு நினைவாக பொங்கல் அன்று அவரது சமாதியில் பொங்கல் வைத்து வழிபாடு செய்வது இப்பகுதி மக்களில் வரவேற்பை பெற்று உள்ளது. இது பற்றிய விவரம் :

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, நூத்துலாபுரம் ஊராட்சி, குளத்துப்பட்டியில் வசித்த பெரிய கருப்பு தேவர் மகன் ஒச்சாத்தேவர் .இவர் 15 .6. 1928ஆம் ஆண்டு பிறந்தார். சுதந்திரம் பெறுவதற்கு முன்பே படித்து தென்னக ரயில்வே துறையில் வேலைக்குச் சேர்ந்து பணியாற்றி வந்தார். அப்போது 4.1.1964 தேதி தொற்று நோயாக காலராவில் பாதிக்கப்பட்டு பொங்கல் விழாவிற்கு சில தினங்களுக்கு முன்பு இறந்து போனார். அப்போது இவரது மனைவி ரத்தினம்மாள். தனது கணவர் இறந்த பொங்கல் விழாவை ஒட்டி இறந்ததால் இனி வரும் காலங்களில் தனக்கும், தனது குழந்தைகளுக்கும் பொங்கல் விழா வீட்டில் இல்லை. மாறாக அவரது சமாதியில் பொங்கல் வைத்து வழிபட முடிவு செய்தார். அதன்படி ஒவ்வொரு ஆண்டும் தனது கணவருக்காக தனது குழந்தைகளை அழைத்துக் கொண்டு தனது கணவர் அடக்கம் செய்யப்பட்ட குளத்துப்பட்டி சீத்தாபுரம் சாலையில் உள்ள சமாதிக்கு சென்று பொங்கல் வைத்து வழிபாட்டார். கடந்த18.8. 2020 ஆம் ஆண்டு ரத்தினம்மாள் கொரோனா காலகட்டத்தில் கொரோனாவில் பாதிக்கப்பட்டு இறந்து போனார். அதனைத் தொடர்ந்து அவரது மகன் மனோகரன் தலைமையில் மகன்கள், மகள்கள், பேரன், பேத்திகள் கொள்ளு பேரன் பேத்திகள் என அனைவரும் தமிழர் திருநாளான தைப்பொங்கல் அன்று ஓச்சா தேவரின் சமாதிக்கு சென்று பொங்கல் வைத்து வழிபட்டு வருகின்றனர். இதனை அறிந்த இப்பகுதி பொதுமக்கள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை வரவேற்று பிரசாதமாக பெற்று மகிழ்ச்சியை தெரிவிக்கின்றனர். இதுகுறித்து குளத்துபட்டியை சேர்ந்த மனோகரன் கூறியதாவது:

தமிழர் திருநாளான தைப்பொங்கல் அன்று புத்தாடைகள் அணிந்து உலகமெங்கும் வாழும் தமிழர்கள் கொண்டாடப்படும் தைத்திருநாளான பொங்கல் விழாவை 62 ஆண்டு காலமாக எங்களது தந்தை ஒக்சாத்தேவர் சமாதியில் பொங்கல் வைத்து வழிபட்டு வருகிறோம். இதனால் எங்கள் குடும்பத்திற்கு நன்மைகள் கிடைக்கிறது. எங்கள் குடும்பம் வாழையடி வாழையாக இந்த சமாதியில் பொங்கல் வைத்து வழிபாடு செய்ய எனது தாயார் ரத்தினம்மாள் வலியுறுத்தி சென்றது மற்றும் எங்கள் பழக்கமும் முன்னோர்களின் வழிபாடுகளை முன்னுதாரணமாக செய்து வருகிறோம் என தெரிவித்தார். இன்றைக்கு கலாச்சாரத்தில் தாய் தந்தை இறந்து போனால் ஏராளமானவர்கள் சடங்குகள் செய்வதற்கு கூட தயங்கும் காலத்தில் ஒரு குடும்பம் 62 ஆண்டுகளாக சமாதியில் தலைமுறை தலைமுறையாக பொங்கல் வைத்து வழிபாடும் நிகழ்ச்சி பொதுமக்கள் மத்தியில் வரவேற்பையும் ஒரு நிகழ்ச்சியும் உருவாக்கி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



## கிருஷ்ணகிரியில் அமைப்புசாரா ஓட்டுனர் அணி சார்பில் எம்ஜிஆர் அவர்களின் பிறந்த நாள் விழா

கிருஷ்ணகிரி, ஜன.18-

மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் 109வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கொய்யன் கொட்டாய் கிராமத்தில் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் ஆஜி தலைமையில், எம் ஜி ஆர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் கேக் வெட்டி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் முன்னாள் கவுன்சிலர்கள் நடுபையன், ராதா சென்ராயன் அதிமுக நிர்வாகிகள் கிளை செயலாளர் சென்ராயன், நாகராஜ், செல்வம், முனுசாமி, எல்.சென்ராயன், சஞ்சய், மாட்ட மந்தை, செயலாளர் சுப்புரு, ராஜேந்திரன், கிளி( எ) லட்சுமணன், நாகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## கிருஷ்ணகிரி நகர அதிமுக சார்பில் எம்ஜிஆர் அவர்களின் 109 வது பிறந்தநாள் விழா அசோக் குமார் எம் எல் ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, ஜன.18-

கிருஷ்ணகிரி நகர அதிமுக சார்பில் ரவுண்டானா அருகே நகர செயலாளர் கேசவன் தலைமையில் மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் அவர்களின் 109 ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அசோக் குமார் அவர்கள் கலந்து கொண்டு எம்ஜிஆர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மனோரஞ்சிதம் நாகராஜ், முனி வெங்கட்டப்பன்,அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் ஆஜி, அதிமுக நிர்வாகி நவாப்,மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன், மாவட்ட அம்மா பேரவை தலைவர் தங்கமுத்து,மாவட்ட இளைஞர் அணி செயலாளர் கார்த்திக் பால்ராஜ், ஒன்றிய செயலாளர் சூர்யா, முன்னாள் நகர துணை செயலாளர் சரவணன், முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் வெங்கடாசலம், நகர துணை செயலாளர் குரு, மா வட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் மக்பூல், மாவட்ட பிரதி நிதி கோவிந்தராஜ் உட்பட அதிமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## காவேரிப்பட்டணத்தில் அதிமுக மேற்கு ஒன்றியம், நகர கழகம் சார்பில் எம்ஜிஆர் பிறந்த நாள் விழா, அசோக்குமார் எம் எல் ஏ பங்கேற்பு

காவேரிப்பட்டணம், ஜன.18-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் அதிமுக மேற்கு ஒன்றியம், நகர கழகம் சார்பில் அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.இந்நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் பையூர் பெ.ரவி,நகர செயலாளர் விமல் ஆகியோர் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளரும், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர்

கே.அசோக்குமார் கலந்து கொண்டு எம்ஜிஆரின் திரு உருவ சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து கட்சி தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கி, அன்னதானம் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மனோரஞ்சிதம் நாகராஜ், முனி வெங்கட்டப்பன், மாவட்ட விவசாய அணி மோகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு ஜெயக்குமார்,பொதுக்குழு உறுப்பினர் வாசுதேவன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன், அதிமுக நிர்வாகி நவாப், முன்னாள் பால்வளத் தலைவர் குப்புசாமி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சங்கீதா கேசவன், ஒன்றிய துணை செயலாளர் விக்ரம் குமார்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கணேசன், ஒன்றிய அவைத் தலைவர் சுந்தர்,அதிமுக பிரதிநிதிகள் ஆறுமுகம்,மதிவாணன், பெரியசாமி , சண்முகம், சரவணன், கணேசன், மற்றும் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர்கள் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள்மற்றும் மாவட்ட ,ஒன்றிய,நகர கிளைக் கழக பொறுப்பாளர்கள் மற்றும் ஏராளமான கட்சித் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## மாடம்பாக்கத்தில் எம்ஜிஆர் 109வது பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கப்பட்டது





தாம்பரம் ஜன.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட மாடம்பாக்கம் பகுதி 69வது வட்ட கழக சார்பில் முன்னாள் அதிமுக நிறுவனரும் முன்னாள் முதலமைச்சருமான எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்த நாளை விழா மாடம்பாக்கம் பகுதி 69வது வட்ட கழக செயலாளர் தீபம் எம்.சீனுவாசன் ஏற்பாட்டில் நடைபெற்றது

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக மாடம்பாக்கம் பகுதி கழகச் செயலாளரும் தாம்பரம் மாநகராட்சி 70வது வார்டு மாமன்ற உறுப்பினருமான மாடம்பாக்கம் எம்.தேவேந்திரன் கலந்துகொண்டு எம்ஜிஆர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர் பின்னர் பொதுமக்களுக்கு காலை காலை சிற்றுன்றி வழங்கினார்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு தலைவர் எம்.கே.கோவிந்தன், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ். மலர்மன்னன், 69வது மாமன்ற உறுப்பினர் வாட்டர் கே.ராஜ், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் எஸ்.ரமேஷ், பகுதி துணைச் செயலாளர் தேணுகா, நிர்வாகிகள் ராமலிங்கம், கனிபாஸ்கர், தேவராஜ், அருள், கே.எல். பாபு, வெங்கட்ராமன், செந்தாமரை, ஆனந்தன், சாந்தி, காமாட்சி, கணேஷ், செல்வராஜ், மஞ்சுளா, கணபதி, சுப்ரமணி, அப்சல் கான், பாபு, முனுசாமி, சேகர் டைலர், ரஞ்சன், குணசேகரன், ஆரோன், முரளி, அன்பு, சேட்டு, ஆகியோர் கலந்து எம்ஜிஆர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## மாட்டுப் பொங்கலையொட்டி, பொங்கல் வைத்து மாடுகளுக்கு படையலிட்டு வழிபட்டனர்.

கிருஷ்ணகிரி, ஜன. 18-

மாட்டுப் பொங்கலையொட்டி, பொங்கல் வைத்து மாடுகளுக்கு படையலிட்டு வழிபட்டனர்.

கிருஷ்ணகிரி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான காவேரிப்பட்டணம், பர்கூர், வேப்பனஹள்ளி, மகாராஜகடை உள்ளிட்ட பகுதிகளில், மாட்டுப் பொங்கல் பண்டிகை நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டன. இதையொட்டி, ஆண்டு முழுவதும் தங்களுக்காக உழைக்கும் மாடு, எருமை, ஆடுகள் உள்ளிட்ட கால்நடைகளை குளிப்பாட்டி, வண்ணப் பொடிகளால் அலங்கரித்து, மஞ்சள், குங்குமம் இட்டு அழகு படுத்தினர். அதேபோல், கிருஷ்ணகிரி பாப்பாரப்பட்டி ஏரிக்கரை மற்றும் பெரியஏரி மேற்குகோடியில் உள்ள விவசாய நிலத்தில், பொங்கல் வைத்து மாடுகளுக்கு படையலிட்டு, பொலியே பொலி என கோஷமிட்டு குடும்பத்துடன் வழிபட்டனர். படையலை மாடுகளுக்கு உணவாகக் கொடுத்து ஆசி பெற்றனர்.

இதே போல், கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணை அருகில் உள்ள பெரியமுத்தூர், பாறைக் கொட்டாய், நெக்குந்தி, நாகராஜபுரம், அவதானப்பட்டி உள்ளிட்ட தென்பெண்ணை ஆற்றின் கரையில் வசிக்கும் மக்கள், மாட்டுப் பொங்கலை முன்னிட்டு தங்கள் வளர்ப்பு ஆடு, மாடுகளை வாய்க்காலில் குளிப்பாட்டி அழகுப் படுத்தினர். பின்னர் புத்தாடைகள் அணிந்து, புதுப் பானையில் பொங்கல் வைத்து, தங்கள் வளர்ப்பு கால்நடைகளுக்கு படையல் வைத்து வணங்கினர். பின்னர் உறவினர்களுக்கு விருந்து சமைத்து பரிமாறினர்.





## வைகை அணையில் கலை பண்பாட்டு துறை, சுற்றுலா துறை சார்பாக பொங்கல் கலை நிகழ்ச்சி விழா

தேனி ஜன. 18-

தேனி மாவட்டம் வைகை அணையில் சிறுவர் பூங்காவில் கலை பண்பாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை சார்பாக பொங்கல் கலை நிகழ்ச்சி விழா நடைபெற்றது இந்த கலை நிகழ்ச்சியில் தப்பாட்டம் தேவர் ஆட்டம்கரகாட்டம் நையாண்டி மேளம்...மாடு ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளை தேனி மாவட்டத்தில் உள்ள ஊர்களில் இருந்து வைகை அணைக்கு வந்த சுற்றுலா பயணிகள் இந்த இந்த நிகழ்ச்சியினை கண்டுகளித்தனர் இந்நிகழ்வில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் பெரியவர்கள் சிறுவர் ... சிறுமியர்கள் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கண்டு ரசித்து மகிழ்ந்தனர்..

இந்த நிகழ்ச்சியை நீர்வள துறை உதவி செயற்பொறியாளர் அலுவலக அதிகாரிகள் தேனி கலை பண்பாட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலக ஊழியர்கள் சர்வர் மன்ற திட்ட அலுவலர் சுகுமார் ஓவியர் ஆசிரியர் ஜோசப் சுற்றுலாத்துறை அலுவலர் பாஸ்கர் மற்றும் அரசு ஊழியர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கலை பண்பாட்டு துறை அலுவலர் தேனி தனுஷ்கோடி இந்த விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## கிருஷ்ணகிரி கொல்லப்பள்ளி கிராமத்தில் ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத அருள்முருகன் திருக்கோவில் பூஜை

### முன்னால் தலைவர் எல். சுப்பிரமணியன் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு



கிருஷ்ணகிரி, ஜன.18-

கிருஷ்ணகிரி அருகே உள்ள கொல்லப்பள்ளி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி தேய்வானை சமேத அருள்முருகன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் நடைப்பெற்றது. மஹா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 48 நாங்கள் மண்டல பூஜைகள் நடைப்பெற்று வந்தது.

இந்த மண்டல பூஜையின் நிறைவு நாளினை முன்னிட்டு ஸ்ரீ வள்ளி, தேய்வானை சமேத அருள்முருகன் திருக்கோவில் சிறப்பு பூஜை மற்றும் மாபெரும் அன்னதானம் வழங்கும் விழா கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும்,

காங்கிரஸ் கட்சியின் பொதுக் குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் அவர்களின் ஏற்பாட்டில் நடைப் பெற்றது..

இதன் முன்னதாக இந்த விழாவிற்கு வருகை தந்த எல் சுப்பிரமணியன் அவர்களுக்கு முன்னால் ஊராட்சி மன்றத் தலைவர் செல்வராஜ் தலைமையில் கிராம மக்கள் பட்டாசு வெடித்து மேளதாளங்களுடன், குதிரையாட்டம், மயிலாட்டம் உள்ளிட்ட நாட்டுபுறக்கலைகளுடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து ஸ்ரீ வள்ளி தேய்வானை சமேத அருள்முருகன் திருக்கோவில் சிறப்பு பூஜைகள் மற்றும் மாபெரும் அலங்காரப் பூஜைகள் நடைப்பெற்றது, உலக நண்மைக்காகவும், நல்ல மழை பெய்து விவசாயம் செழித்திட வேண்டி நடைப்பெற்ற இந்த சிறப்பு பூஜையில் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து ஏராளமான மக்கள் கலந்துக்கொண்டு சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்த ஸ்ரீ வள்ளி தேய்வானை சமேத அருள் முருகனை தரிசனம் செய்து வழிப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கிழக்கு மாவட்ட காங்கிரஸ் முன்னாள் தலைவர் எல். சுப்பிரமணியன் மாபெரும் அன்னதானம் வழக்கும் பணியினையும் துவக்கி வைத்தார். இதில் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம மக்கள் கலந்துக் கொண்டனர்.

# ஆயக்குடி ஐடிஓ பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு





திண்டுக்கல், ஜன.18-

திண்டுக்கல் மாவட்டம் பழனி ஆயக்குடி ஐ டி ஓ பள்ளியில் பயின்ற முன்னாள் 2001முதல் 2003 ஆண்டு மாணவர்கள் 23 ஆண்டுகளுக்குப் பிறகு சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது. பள்ளியின் நுழைவாயில் வாழை மர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அவர்கள் படித்த வகுப்பறைகள் முன்பு வண்ணக் கோலங்களாலும் பலூன்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தனர் மற்றும் மாணவர்கள் தங்களது ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தி கவுரவிக்கும் விதமாக மலரும் நினைவுகள் எனும் தலைப்பில் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தின அவர்களுக்கு மலர் தூவி, மாலை அணிவித்து வரவேற்றனர். பல்வேறு துறைகளில் பணியாற்றி வரும் முன்னாள் மாணவர்கள் 200 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் தலைமை ஆசிரியருக்கு டிவியை பரிசாக அளித்தனர். மற்றும் அரசுத் துறையில் தனியார் துறையில் சிறப்பாக பணியாற்றி வரும் நபர்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டன. இதில் பள்ளி பருவ நினைவுகளை ஆசிரியர்கள் மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். அதே போல, வறுமையில் உள்ள மாணவர்களை கண்டறிந்து அவர்களின் படிப்பிற்கு முன்னாள் மாணவர்களாகிய நீங்கள் உதவி செய்ய வேண்டும் என ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டனர்.





# பெரும்பாக்கம் ராஜசேகர் தலைமையில் அ.தி.மு.க சார்பில் எம்.ஜி.ஆர் 109 வது பிறந்த விழா

பெரும்பாக்கம் ஜன 18-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார்மலை ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில் ( 17.01.26) நேற்று எம்.ஜி.ஆர்.,109 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. கழக அம்மா பேரவை துணைச் செயலாளர், பரங்கிமலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளருமான, பெரும்பாக்கம், இ.ராஜசேகர் தலைமையில் அ.தி.மு.க கழகக் கொடியை ஏற்றி எம்.ஜி.ஆர் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தி, மலர் தூவி வணங்கி பொதுமக்களுக்கு லட்டு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழாவை கொண்டாடினர். இந்த நிகழ்வில் அ.தி.மு.க கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# காவேரிப்பட்டினத்தில் பொங்கல் விழா கொண்டாட்டம்

காவேரிப்பட்டினம், ஜன.18-

உழவர் திருநாள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் விநாயகர் கோயில் அருகே மாடுபிடி வீரர்கள் காளை மாடுகளை கொண்டு வந்து முக்கிய வீதிகளில் ஓட விட்டனர். பாரம்பரிய முறையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை காண சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து பொதுமக்கள் பெருந்திரளாக திரண்டனர். வீதிகளில் ஓடிய காளை மாடுகளை மாடுபிடி வீரர்கள் தங்களின் வீரத்துடன் கட்டுப்படுத்த முயன்றனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது. பொங்கல் பண்டிகையின் பாரம்பரிய விளையாட்டாக கருதப்படும் இந்த நிகழ்ச்சி பொதுமக்களுக்கு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

இந்த மாடுபிடி நிகழ்ச்சியில் ஈடுபட்ட ஐந்துக்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்களுக்கு லேசான காயங்கள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் உடனடியாக அங்கு தயாராக இருந்த ஆம்புலன்ஸ் மூலம் காவேரிப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது.

பொது அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் பாதிப்பு ஏற்படாமல் இருக்க காவேரிப்பட்டினம் காவல் ஆய்வாளர் சரவணன் தலைமையில் காவேரிப்பட்டினம் காவல் நிலைய போலீசார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர். முக்கிய சந்திப்புகள் மற்றும் விநாயகர் கோயில் சுற்றுவட்டார பகுதிகளில் போலீசார் குவிக்கப்பட்டு, போக்குவரத்து கட்டுப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக எந்தவித பெரிய அசம்பாவிதமும் இன்றி நிகழ்ச்சி அமைதியாக நிறைவடைந்தது.

# முதலமைச்சர் வருகை... சிவகங்கை மாவட்ட திமுகவினர் உற்சாக வரவேற்பு

## அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தலைமையில், எம்எல்ஏ தமிழரசி , மாரியப்பன் கென்னடி , சேங்கைமாறன் பங்கேற்பு



சிவகங்கை ஜன 18-

மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு மற்றும் இராமநாதபுரம் பரமக்குடியில் மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தியாகி இமானுவேல் சேகரனாரின் மணகமண்டபம் திறந்து வைப்பு உள்ளிட்ட அரசு நிகழ்ச்சிகளுக்காக மதுரைக்கு விமானம் மூலம் வந்தடைந்து அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பின்னர் இராமநாதபுரம் பரமக்குடி செல்லும் வகையில் சிவகங்கை மாவட்ட எல்லையான திருப்புவனம் புறநகர் பகுதி பைபாஸ் சாலையில் சிவகங்கை மாவட்ட திமுகவினர் மிகுந்த உற்சாக வரவேற்பு அளித்தனர்...

மாவட்டக்கழக திமுக செயலாளரும், தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் மேனாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் ஆ. தமிழரசி ரவிக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் சேர்மன் சேங்கை மாறன் , சட்டமன்ற மேனாள் உறுப்பினர்களான வி. பி. இராஜன் , ஒன்றிய செயலாளர் சுப. மதியரசன் , சேர்மன் மாரியப்பன் கென்னடி, தொகுதி பார்வையாளர் முருகவேல் , கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன் , ஆகியோர் கலந்து கொண்டு வரவேற்பளித்தனர்...

இந்த நிகழ்ச்சியில் மாநகர துணை மேயர், மாநகர் செயலாளர் ந. குணசேகரன், சிவகங்கை நகர செயலாளர் சேர்மன் சி. எம். துரை ஆனந்த், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர், தேவகோட்டை நகர செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் பெரி. பாலமுருகன் அம்பலகாரர் , தேவகோட்டை தெற்கு நாகனி ரவி , கல்லல் கிழக்கு நா. நெடுஞ் செழியன் , திருமலை முத்துராமலிங்கம்,வசந்தி சேங்கைமாறன் , கண்டாங்கிபட்டி பெ. மந்தக்காளை , ஏனாதி கடம்பசாமி , ஆர். எம். கென்னடி , யோக. கிருஷ்ணகுமார் , மானாமதுரை க. பொன்னுச்சாமி , கா. வெங்கட்ராமன் , வே. தமிழ்மாறன் , துரை. இராஜாமணி, வழக்கறிஞர் அண்ணாதுரை , பெரியகோட்டை முத்துச்சாமி , பழையனூர் சுப்பிரமணியன் , நாகூர் கனி ,ஆகியோரும் , மாவட்ட நிர்வாகிகளான இளைஞரணி துணை அமைப்பாளர்களான மணலூர் கே. எம். பொற்கோ , எஸ். எம். மதிவாணன் , கிங் கார்த்திக், வீர ஈஷ்வரன், கொத்தமங்கலம் சேது , மாவட்ட திமுக செய்தித் தொடர்பாளர் கவுன்சிலர் அயூப் கான் , துணைச் செயலாளர் ஒ. புதூர் செல்வம் , அண்டக்குடி முருகானந்தம் , திருப்புவனம் திருமலைக்கண்ணன் , தலைமைக்கழக பேச்சாளர் , மாவட்ட பிரதிநிதி கீழநெட்டூர் அய்யாச்சாமி , அச்சங்குளம் முருகன் , பூவந்தி மணிகண்டன் , டி. ஆர். சேகர் , திருநாவுக்கரசு , புலியூர் ரவி , பூவந்தி பன்னீர் செல்வம் , இடைக்காட்டூர் ஆ. மு. சண்முகநாதன் , தொழிற்சங்கம் நைனார்பேட்டை பிச்சை , பூவந்தி ஆறுமுகம் , கட்டிக்குளம் மாணிக்கவாசகம் , மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் அல்லூர் உமாசங்கர் , கண்ணங்குடி கருப்பையா , திருப்பாச்சேத்தி காத்தமுத்து, ஏனாதி இராமலிங்கம் , சக்தி முருகன் , மீனவரணி பாஸ்கரன் , வெள்ளிக்கட்டி அன்பழகன் , புலியூர் பாபு , இராம்குமார், வர்த்தக அணி இரா. தனசேகரன் , அவைத்தலைவர் பொன். இளங்கோவன்,முனைவர் இளங்கோவன் , ரவிச்சந்திரன் , நீலமேகம் , தொகுதி ஐடி விங் ஒருங்கிணைப்பாளர்களான சிவகங்கை முப்பையூர் சிவா , இளையான்குடி கீனா. கானா. கண்ணன் , ஜி. ஆர். பாலா , வர்ஷினி ஸ்டுடியோஸ் புவனேஷ்வரன் , தமறாக்கி அம்பலம் , பெரியகோட்டை பாலா , வளர்மதி கலைச்செல்வன் , கவுன்சிலர் சண்முகப்ரியா , அரசு ஒப்பந்ததாரர் திருப்பாச்சேத்தி மணிமுத்து , இளைஞரணி பிரமனூர் அறிவுக்கரசு , வழக்கறிஞர் , மேலராங்கியம் அஜீத் குமார், புதுப்பட்டி பா. அர்ச்சுனன் , மடப்புரம் மகேந்திரன் , தேளி கோபால் , மாவட்ட பிரதிநிதிகளான சிப்காட் காளியப்பன் , தொண்டரணி , ஜிம் மூர்த்தி , கண்ணமங்கலம் கூட்டுறவு மேனாள் தலைவர் சுப. தமிழரசன் , அவைத்தலைவர் மலைமேகு, வர்த்தக அணி காளையார்கோவில் மேலமைப்பு பிரதிநிதி கண்ணதாசன் , மடப்புரம் அப்பாச்சாமி , லாடனேந்தல் சுப்பையா , இராஜ்மோகன் , இராஜமூர்த்தி, சித்தானூர் முத்துசரவணன் , கண்டதேவி அசோக் , நியமனக்கவுன்சிலர் ரவி , மிக்கேல்பட்டிணம் பாலு , அறங்காவலர் குழுத்தலைவர்களான அல்லிநகரம் மயில்வண்ணன் , வேதியரேந்தல் பால்பாண்டி , மாணவரணி யோகேஷ் அம்பலம் , காரைக்குடி விஜயகுமார் , தேவகோட்டை கருணாநிதி, பொருளாளர் அன்புச்செல்வன் , சங்கங்குளம் ஈஷ்வரன் , சோழபுரம் மாரி , மாவட்ட பிரதிநிதி , நீர்ப்பாசன சங்கத்தலைவர் சூனா சானா என்ற அன்னவாசல் சண்முகம் , இளைஞரணி இடையமேலூர் வேல்முருகன் , வேங்கை சுந்தர் , வேங்கை பாண்டி , திரவியம் , திருப்புவனம் கவுன்சிலர் கண்ணன் , கொன்னக்குளம் மலைச்சாமி , அல்லிநகரம் சூரப்பிரகாஷ் , தொமுச கருத்திருமன் , இடைக்காட்டூர் பரத் பாலாஜி , மேலவெள்ளூர் சேங்கைச்சாமி , சிறுபாலை இராஜேந்திரன் ,நீலமேகம் , கணாணமங்கலம் சேதுராமன் , டெல்லி கணேஷ் , மானாமதுரை அவைத்தலைவர் ரவிச்சந்திரன், பொருளாளர் மயில்வாகணம் , குமரன் ஆறுமுகம் , ஆட்டோ மாரி , செம்புக்குட்டி , கோபிக்கண்ணன் , இளையான்குடி சிவனேசன் , இளையான்குடி மேற்கு பாலச்சந்தர் , கேஆர்பி யாரின் முரட்டு பக்தன் வழக்கறிஞர் தங்கம் பாலமுருகன், மானாமதுரை கவுன்சிலர் சோம சதீஷ் குமார் , கீழப்பசலை சிவக்குமார் , பொன்னழகு , பழையனூர் திருமுருகன் , பெரியகோட்டை ரவீந்திரன் , வெங்கடேசன், பாலகிருஷ்ணன், , மாணவரணி கார்த்திக், சீனிக்குட்டி , பழையூர் பிரபு , மடப்புரம் கார்த்தி , கொந்தகை குழந்தைசாமி , கலுங்குபட்டி முருகன் , அசால்ட் குமார் , வழக்கறிஞர் கீழடி ராஜா , திணேஷ்குமார் , போதிராஜா உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, கிளைக்கழக திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பளித்தனர்...

# எம்.ஜி.ஆர் 109வது பிறந்தநாள் விழா : அ.தி.மு.க தகவல் தொழில்நுட்ப பிரிவு சார்பில் வேலூரில் பொதுமக்களுக்கு அன்னதானம் மாவட்ட செயலாளர் அப்பு, மண்டல செயலாளர் சதீஷ்குமார் வழங்கினர்



வேலூர், ஜன.18-

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க நிறுவனருமான எம்.ஜி.ஆரின் 109வது ஆண்டு பிறந்த நாளையொட்டி, வேலூர் மண்டல அ.தி.மு.க தகவல் தொழில்நுட்ப பிரிவு சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு நடந்தது. நிகழ்ச்சிக்கு அ.தி.மு.க தகவல் தொழில்நுட்ப பிரிவு வேலூர் மண்டல செயலாளர் ஜனனீ பி.சதீஷ்குமார் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே.அப்பு கலந்து கொண்டு எம்.ஜி.ஆர் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதைத்தொடர்ந்து மண்டல செயலாளர் ஜனனீ பி.சதீஷ்குமார் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் எம்.மூர்த்தி, ஜெயலலிதா பேரவை மாநில துணைச் செயலாளர்கள் தாஸ், ஜோதிகுமார், மாவட்ட துணை செயலாளர் ஜெயபிரகாசம், பகுதி செயலாளர்கள் பாண்டியன், ரகு, மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற இணை செயலாளர் நாகு என்ற நாகராஜன், அணி மாவட்ட செயலாளர்கள் வி.எல்.ராஜன், அமர்நாத், ராகேஷ், சுந்தரராஜி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பரமக்குடியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்









பரமக்குடி, ஜன.18-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி வே. இமானுவேல் சேகரனார் அவர்களின் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் திறப்பு விழாவில், தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நவாஸ்கனி ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஈ. ராஜா, தமிழரசி கிருஷ்ணசாமி ஸ்டாலின் குமார் வி. முத்துராஜா உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தாட்கோ தலைவர் இளையராஜா மக்கள் விடுதலை கட்சியின் நிறுவனத் தலைவர் முருகவேல் ராஜன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராமன் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா.வைத்திநாதன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161